1983 மார்ச் 8]

எடுத்துக் கொண்டும், ஏற்கனவே 378-வது ஜி. ஓ. படி தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுவதாக இருந்த அதிகப்பட்சப் பணம், இரண்டாவதாக போடப்பட்ட 284-வது ஜி. ஓ. படி குறைக்கப்பட்டதன் காரணமாகவும் தான் அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் அதன் காரணமாக ஓய்வு பெறக்கூடிய தொழிலாளர்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் சம்பந்தப்பட்ட எல்லாச் சங்கங்களையும் அழைத்துப் பேசி இதற்கு ஒரு முடிவு காண அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இது சம்பந்தமாக நாம் பேசியிருக்கிறோம். பேசிய பின்னும் கூட இந்தப் பிரச்சினை முடிவு அடையவில்லை. எனவே தொழிற்சங்கத் தலைவர்கள், இது பற்றி முழுமையாகப் பேசத் தயாராக வருகிறபோதுதான், எந்த ஜி. ஓ.வை எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுக்க வேண்டும். எனவே ஜி.ஓ. வைப் பொறுத்துத்தான் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது இல்லை. வேறு விதமான சூழ்நிலைகளின் காரணமாகக் கூட கோர்ட்டுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. எனவே அந்த முறையில் அழைத்துப் பேசி முடிவு எடுக்கலாம்.

ஸ்டாண்டர்டு மற்றும் மெட்டாடர் வேன்களுக்கு சுற்றுலா அனுமதி வழங்கும் திட்டம்

*வினா எண். 320—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்டாண்டர்டு, மெட்டாடர் வேன்களுக்கு சுற்றுலா அனுமதி (Tourist Permit) வழங்க அரசு செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மெட்டாடர் மற்றும் ஸ்டாண்டர்டு 20 மூடு வண்டிகளுக்கு சுற்றுலா வாடகைச் சீருந்து அளிப்பது குறித்து அரசு பரிசீலித்து ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி ஓட்டுநர் நீங்கலாக ஆறு பயணி இருக்கைகள் கொண்ட மெட்டாடர் மற்றும் ஸ்டாண்டர்டு-20 மூடு வண்டிகளுக்கு சுற்றுலா வாடகைச் சீருந்து வழங்க அனுமதித் துள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுற்றுலா கழகத்திற்கு வழங்கப் பட்டுள்ள வேன்களுக்கு எவ்வளவு கட்டணங்கள் தற்போது வசூலிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டாக்ஸ் எவ்வளவு என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். ஒரு இருக்கைக்கு 25 ரூபாய் வீதம் 6 இருக்கைகளுக்கு 150 ரூபாய் வசூலிக்கப்படுகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாடு முழுவதும் எத்தனை வண்டிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது? இப்போது அனு மதிக்கப்பட்டுள்ள 6 இருக்கைகளுக்குக் கூடுதலாக உயர்த்துவதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 143 மெட்டாடர் வண்டிகளுக்கும், 318 ஸ்டாண்டர்டு 20 வண்டிகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக் கின்றது. இது போக 345 வண்டிகளைப் பொறுத்தவரையில் 6 மாதங்களுக்குள்ளாக வண்டிகளைக் கொண்டு வந்து காட்ட வேண்டும் என்று சொல்லி ஒரு கண்டிஷன் போட்டு அதன்படி அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. 6 இருக்கை களுக்குமேல் அதிகப்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை. ஏனென் றால் 6 இருக்கைகளுக்குமேல் போனால், அது சீருந்துவாக இருக் காது, மினி பஸ்ஸாக ஆகிவிடும். அதற்கு டாக்ஸ் அதிகம்; எனவே அந்தக் காரணத்தால் இருக்கைகளை அதற்கு மேல் அனு மதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இருக்கை களின் எண்ணிக்கை அடிப்படையில் வரி விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இருக்கை எண்ணிக்கை அடிப்படையிலே வரி விதிக்க வேண்டும் என்றுதான் ஆணையிடப்பட்டு இருக்கின்றது. எனவே 6 இருக்கைகளுக்கு மேலே மெட்டாடர் மற்றும் ஸ்டாண்டர்டு-20 வண்டிகளுக்கு அனுமதி அளிக்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் கேட்கப்பட்ட கேள்விக்கு என்ன பதிலைச் சொன்னார்கள் என்று தெரிந்து கொண்டு உறுப்பினர்கள் மேலும் கேள்வி கேட்க வேண்டுமே தவிர், கேட்ட கேள்வியினையே திரும்பவும் கேட்கக்கூடாது.